NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2009

# TAMIL FIRST ADDITIONAL LANGUAGE: PAPER II

Time: 2 hours | 70 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This paper consists of 6 pages.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. All answers must be in **TAMIL**.

---

IEB Copyright © 2009

## SECTION A கதை : <u>பலரையும் பகைத்த பச்சையப்பன்</u>

1. சரியான விடை எழுதுக :

1.1 பச்சையப்பன் எங்கே வாழ்ந்திருந்தான்? (2)

1.2 பச்சையத்தன் வயது என்ன? (2)

1.3 அவனுக்கு ஏன் யாரும் ஒன்றும் செய்யமுடியாது என்ற எண்ணம்? (2)

1.4 அவன் ஊராரை எப்படி மதித்தான்? (2)

1.5 அவனுடைய போக்கு யாருக்கு பிடித்தது? (2)

1.6 பச்சையப்பனுக்கு ஊரில் வேண்டியவர்கள் யார்? (2)

1.7 ஒரு நாள் பலர் என்ன தீர்மாணித்தார்? (2)

1.8 ஒரு நாள் அவன் ஒருவனை இகழ்ந்தப் போது என்ன நடந்தது? (2)

1.9 பிறகு என்ன ஆகிவிட்டது? (2)

1.10 முடிவு செய்க: ஊருடன் பகைகின்...... (2)

1.11 <u>உண்மை</u> அல்லது <u>உண்மை அல்ல</u> என்று எழுதுக :

1.11.1 பச்சையப்பன் உடலுக்கு ஆற்றலைத் தேடியிருந்தான். (1)

1.11.2 அவன் பலரைக் காலால் உதைத்தான் (1)

1.12 சரியாக எழுதுக :

உம்: ஒவன்ரு = ஒருவன்

1.12.1 ஊல்ரி (2)

1.12.2 உல்ட (2)

1.12.3 பேனான்சி (2)

IEB Copyright © 2009

1.13 கீழ்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொற்கள் தருக :

உம் : அங்கே -இங்கே

1.13.1 சிலர் (1)

1.13.2 உண்டு (1)

1.13.3 அது (1)

1.14 முடிவு செய்க :

1.14.1 அன்னையும் பிதாவும்............................................ (1)

1.14.2 ஏவா மக்கள்..................................................... (1)

1.14.3 கிட்டாதாயின................................................ (1)

1.14.4 குற்றம் பார்க்கிற்............................................ (1)

**[35]**

அல்லது **[OR]**

கொன்றைவேந்தேன் விளக்கக் கதைகளிருந்து:

<u>பலரையும் பகைத்த பச்சையப்பன்</u>

என்ற கதையைப் பற்றி சுமார் 20 வரிகள் எழுதுக :

**[35]**

**35 marks**

## SECTION B கவிதை

**கீழ்வரும் கவிதையை நன்றாக படித்து, பின்வரும் கேள்விகளுக்கு சரியான விடை தருக :**

### தாயின் மணிக்கொடி

பல்லவி

தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்! (தாயின்)

1 ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் - அதன்
உச்சியின் மேல் 'வந்தே மாதரம்' என்றே
பாங்கின் எழுதித் திகழும் - செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்! (தாயின்)

2 பட்டுத் துகிலென லாமோ? - அதில்
பாய்ந்து சுழற்றும் பெரும்புயற் காற்று
மட்டு மிகுந்தடித் தாலும் - அதை
மதியாதவ் வுறுதிகொள் மாணிக்கப் படலம் (தாயின்)

3 இந்திரன் வச்சிரம் ஓர்பால் - அதில்
எங்கள் துருக்கர் இளம்பிறை ஓர்பால் (தாய்)
மந்திரம் நடுவுறத் தோன்றும் - அதன்
மாண்பை வகுத்திட வல்லவன் யானோ? (தாயின்)

4 கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர் - எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியர் அவ்வீரர் - தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொயினைக் காப்பார் (தாயின்)

5 அணியணி யாயவர் நிற்கும் - இந்த
ஆரியக் காட்சியோர் ஆனந்தம் அன்றோ?
பணிகள் பொருந்திய மார்பும் - விறல்
பைந்திரு வோங்கும் வடிவமும் காணீர்! (தாயின்)

6 செந்தமிழ் நாட்டுப் பொருநர் - கொடுந்
தீக்கண் மறவர்கள் சேரன்றன் வீரர்
சிந்தை துணிந்த தெலுங்கர் - தாயின்
சேவடிக் கேபணி செய்திடு துளுவர்

IEB Copyright © 2009

1. <u>தாயின் மணிக்கொடி</u>

1.1 கொடிட்ட இடங்களில் சரியான சொற்களால் நிருப்புக :

1.1.1 அதன் உச்சியன் மேல்............................................... (1)

1.1.2 அதில் பாயந்து சமுற்றும் பெரும்புயற்.................................... (1)

1.1.3 .........................................................வச்சிரம் ஓர்பால். (1)

1.1.4 கம் பத்தின்...........................................காணீர். (1)

1.1.5 பணிகள் பொருந்திய......................................................... (1)

1.2 சரியான விடை எழுதுக ;

1.2.1 இக்கவிதையை எழுதியவர் யார் ? (1)

1.2.2 எது ஓங்கி வளர்ந்தது ? (1)

1.2.3 எது வீசிப் பயந்தது? (1)

1.2.4 பெரும்புயற் காற்று என்ன செய்தது ? (1)

1.2.5 எது நடுவுறத் தோன்றும் ? (1)

1.2.6 கம்பத்தின் கீழ்நிற்றல என்ன காணளாம் ? (1)

1.2.7 யார் சிந்தை துணிந்தது ? (1)

1.2.8 சரியாக எழுதுக ; உம் : ச் உசின் யி = உச்சியின்

(a) யின் தா (1)

(b) கா றுற் (1)

1.2.9 சேர்த்து எழுதுக : உம் :மணி + கொடி =மணிக்கொடி

(a) பச்சை + கொடி = (1)

(b) பெரிய + கூட்டம் = (1)

1.2.10 எதிர்ச்சொல் தருக: உம் : பெரிய - சிறிய

(a) கீழ் : (1)

**[17]**

2. கீழ்வரும் கவிதையை நன்றாக படித்து சரியான விடை எழுதுக :

மாயக் குயிலோர் மரக்கிளையில் வீற்றிருந்தே
பாயும் விழிநீர் பதைக்கும் சிறியவுடல்
விம்மிப் பரிந்துசொலும் வெந்துயர்ச்சொல் கொண்டதுவாய்
அம்மவோ! மற்றாங்கோர் ஆண்குரங்கு தன்னுடனே
ஏதேதோ கூறி இரங்கும் நிலைகண்டேன்
தீதேது? நன்றேது? செய்கைத் தெளிவேது?
அந்தக் கணமே அதையும் குரங்கினையும்
சிந்தக் கருதி உடைவாளில் கைசேர்ந்தேன்
கொன்றுவிடு முன்னே குயிலுரைக்கும் வார்த்தைகளை
நின்று சற்றே கேட்பதற்கென் நெஞ்சம் விரும்பிடவும்
ஆங்கவற்றின் கண்ணில் அகப்படா வாறருகே
ஓங்கு மரத்தின்பால் ஒளிந்துநின்று கேட்கையிலே
பேடை குயிதனைப் பேசியது ‘வானரரே!
ஈடறியா மேன்மையழ கேய்ந்தவரே! பெண்மதான்
எப்பிறப்புக் கொண்டாலும் ஏந்தலே! நின்னழகைத்
தப்புமோ? மையல் தடுக்கும் தரமாமோ?
மண்ணிலுயிர்க் கெல்லாம் தலைவரென மானிடரே

2.1 இப்பாட்டை எழுதியவர் யார் ? (1)

2.2 எந்த விலங்கைப்பற்றி எழுதியுள்ளது ? (1)

2.3 எந்த பெண்மணியைப் பற்றி எழுதிள்ளது ? (1)

2.4 கோடிட்ட இடங்களில் சரியான சொற்கள் எழுதுக :

2.4.1 மாயக் குயிலோர்.................................வீற்றிருந்தே. (1)

2.4.2 ஏதேதோ .................................இரங்கும் நிலைகண்டேன் ? (1)

2.4.3 தப்புமோ ? மையால்...................தரமாமோ ? (1)

2.5 மறுபிறப்பில் யார் குயிலாக பிறந்தது ? (1)

2.6 முன்னே [9 வது வரி] என்ற சொல்லுக்கு எதிர்சொல் தருக. (1)

2.7 குரங்களைப் பற்றி 4 - 5 வரிகள் எழுதுக (3)

**[11]**

IEB Copyright © 2009

3. முடிவு செய்க :

3.1 அகர முதல எழுத்தெல்லாம் ................................................ (1)

3.2 கற்றனாலாய பயனென் சொல்வாலறிவன ..............................

.................................................................................................... (1)

3.3 மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் ...................................

.................................................................................................... (1)

3.4 திருவள்ளுவரைப்பற்றி 5 - 8 வரிகள் எழுதுக : (4)
**[7]**

**35 marks**

மொத்த மதிப்பெண்கள் **70**

**Total: 70 marks**

IEB Copyright © 2009